**முக்கிய வார்த்தைகள்:**
திருக்குர்ஆன்
அமைதி / சாந்தி
கவலை / பதற்றம்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**06 மார்ச் 2026 / 16 ரமதான் ஹிஜிரி 1447**

# திருக்குர்ஆன்: பிரச்சனைக்குரிய காலங்களில் அமைத்திக்கான ஆதாரமாக உள்ளது

الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ، وَوَفَّقَنَا لِإِدْرَاكِ شَهْرِ الصِّيَامِ وَالْقِيَامِ،
وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْمَلِكُ الْعَلَّامُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
سَيِّدُ الْأَنَامِ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ خَيْرِ مَنْ صَلَّى وَصَامَ،
وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْكِرَامِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ. قَالَ جَلَّ
فِي عُلَاهُ: إِنَّ هَٰذَا ٱلْقُرْءَانَ يَهْدِى لِلَّتِى هِىَ أَقْوَمُ وَيُبَشِّرُ ٱلْمُؤْمِنِينَ ٱلَّذِينَ
يَعْمَلُونَ ٱلصَّٰلِحَٰتِ أَنَّ لَهُمْ أَجْرًا كَبِيرًا.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். **திருக்குர்ஆனை** நமது வழிகாட்டியாக ஏற்று, இறை பக்தி மற்றும் உண்மையின் பாதையில் தொடர்ந்து நிலைத்து நிற்போமாக!

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரமதான் மாதம், **திருக்குர்ஆனுடன்** நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. **திருக்குர்ஆன்**, ரமதான் மாதத்தில் தான் அருளப்பட்டது எனத் திருக்குர்ஆனின் ”அல்-பகரா” எனும் அத்தியாயத்தின் 185-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

நம்மில் பலர், திருக்குர்ஆனை அதிகமாக ஓதுவதற்கும், அதன் புனிதமான வசனங்களில் சிந்தனை செய்வதற்கும் அரிய வாய்ப்பாக ரமதான் மாதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எனினும், **திருக்குர்ஆனு டனான** நமது தொடர்பு அதனை ஓதுவதோடு மட்டும் இருப்பது கூடாது;

குறிப்பாக, ”ஃபித்னா” [குழப்பம்] மற்றும் சோதனைகளால் நாம் சூழப்பட்டுள்ள இக்காலத்தில், நமக்குப் பயம் மற்றும் **கவலையை**, பதற்றத்தை ஏற்படுத்துகின்ற கொந்தளிப்புகள் உலகில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் தற்காலத்தில், திருக்குர்ஆனை ஓதினால் மட்டும் போதுமாகாது. நாம் தற்போது காணுகின்ற நிச்சயமற்ற, அமைதியில்லாத நிலைக்குப் பின்னணியில் உள்ள இறைத் தத்துவம் என்ன? என்பதை அறிந்து கொள்ளவும் முயற்சிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிச்சயமற்ற காலங்களில், **திருக்குர்ஆன்** நமக்குப் பக்க பலமாக இருந்து, வழிகாட்டுதலையும் சரியான திசையையும் காட்டி வருகிறது. **திருக்குர்ஆனின்** ”அன்னிஸா” எனும் அத்தியாயத்தில் *”நூரன் முபீனா”* [தெளிவான விளக்கு] எனவும், ”யூனுஸ்” எனும் அத்தியாயத்தில் *”ஷிஃபா”* [நலம் தருவது] எனவும் திருக்குர்ஆனை அல்லாஹ் வர்ணிக்கின்றான்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இன்ஷாஅல்லாஹ், இன்றைய ”குத்பா” பிரசங்கத்தில், கவலை மற்றும் பதற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உள்ளத்துக்கும் **அமைதியை** ஏற்படுத்தும் விஷயத்தில், **திருக்குர்ஆன்** வழங்கும் மூன்று வழிகாட்டுதல் களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட உள்ளது.

**முதலாவதாக: திருக்குர்ஆனின் வழிகாட்டுதல்கள் காலம் கடந்து பயனளிப்பவையாகும்.**

நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், நிச்சயமாக **திருக்குர்ஆனிலிருந்து** வழிகாட்டுதலை நாம் பெற முடியும். நமது வாழ்வாதாரம், நமது குடும்பத்தார்களின் எதிர்காலம், நமது கடந்த காலத் தவறுகளின் காரணமாக நம்மிடம் ஏற்படும் குற்ற உணர்வு அல்லது பல உயிர்களைக் கொன்று குவித்து வரும் அதிகாரத்திற்கானப் பேராசையின் காரணமாக ஏற்படும் அழிவுகள், அநீதங்கள் ஆகிய எதைப் பற்றி நாம் சிந்தித்தாலும் நமக்குத் திருக்குர்ஆனில் நேர்வழி கிடைக்கும்.

**திருக்குர்ஆனில்**, ஃபிர்அவ்னின் வரலாறு, ஆது, ஸமூது போன்ற சமுதாய மக்களின் வரலாறுகளைப் படிக்கின்றோம்; இவர்களெல்லாம் ஒரு காலத்தில் ஆடம்பரமான வாழ்க்கையையும் அருள்களையும் அனுபவித்து வந்தார்கள். எனினும், அவர்களின் ஆணவம், கர்வம், உண்மையை மறுத்தல், அநீதம் ஆகியவற்றின் காரணமாக இறுதியில் அவர்கள் அழிவை எதிர்கொண்டார்கள். அவர்களின் வரலாறுகள் **திருக்குர்ஆனில்** பாதுகாக்கப்பட்டுள்ளன; அவை, எல்லாக் காலங்களிலும் மனிதகுலம் அனைவருக்கும் பயன் தரும் மிகச் சிறந்த பாடங்களாக இருக்கின்றன.

**இரண்டாவதாக: திருக்குர்ஆன் பொறுப்புடன் சிந்திக்குமாறு வலியுறுத்திக் கூறுகிறது.**

சீர்கேடுகள் தொடர்ந்து பரவி வருவதை நாம் காணும் போது நம்மில் சிலர், எப்போது நீதம் நிலைநாட்டப்படும்? வெளிப்படையான அநீதங்கள் எப்போது நிறுத்தப்படும்? அல்லாஹ்வின் உதவியும் கிருபையும் எங்கே? என்றெல்லாம் கேள்விகளைக் கேட்கலாம்.

உலகில் நடைபெறும் எந்த ஒரு செயலும் அல்லாஹ்வின் தீர்ப்பு மற்றும் அவனது அறிவு ஞானத்திலிருந்து தப்ப முடியாது எனத் **திருக்குர்ஆன்** நீண்ட காலமாகத் தெளிவாகக் கூறி வருகிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் ”இப்ராஹிம்” எனும் அத்தியாயத்தின் 42-வது வசனத்தில் கூறுகிறான்:

”மேலும், அநியாயக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி அல்லாஹ் பாராமுகமாக இருக்கின்றான் என்று [நபியே] நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம்; அவர்களுக்குத் [தண்டனையைத்] தாமதப்படுத்துவதெல்லாம், கண்கள் விரைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் [அந்த மறுமை] நாளுக்காகத் தான்”

**மூன்றாவதாக: இந்நிலையில், நாம் என்ன செய்ய வேண்டுமெனத் திருக்குர்ஆன் கூறுகிறது.**

நாம் நிச்சயமற்ற தன்மை, பயம், **கவலை**, பதற்றம் ஆகிய எந்தச் சூழ்நிலையை எதிர்கொண்டாலும் இறுதியில், நல்ல முடிவு நேர்மையையும் இறை பக்தியையும் பற்றிப் பிடிப்பவருக்கே கிடைக்கும் என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா வாக்களிக்கின்றான். அல்லாஹ், திருக்குர்ஆனின் ”அல்-கஸஸ்” எனும் அத்தியாயத்தின் 83-வது வசனத்தில் கூறுகிறான்:

تِلْكَ ٱلدَّارُ ٱلْءَاخِرَةُ نَجْعَلُهَا لِلَّذِينَ لَا يُرِيدُونَ عُلُوًّا فِى ٱلْأَرْضِ وَلَا فَسَادًا ۚ
وَٱلْعَٰقِبَةُ لِلْمُتَّقِينَ ﴿٨٣﴾

பொருள்: அந்த மறுமையின் வீட்டை, இப்பூமியில் [தங்களைப்] பெருமைப்படுத்திக் கொள்ளவும், குழப்பத்தை உண்டாக்கவும் விரும்பாதிருப்பவர்களுக்கே நாம் சொந்தமாக்கி வைப்போம்; ஏனெனில், பயபக்தியுடையவர்களுக்கே [மேலான] முடிவு உண்டு.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், நமக்கு ஒரு ஹதீதைப் போதித்துள்ளார்கள்; அந்த ஹதீதை இமாம் அஹ்மது [ரஹ்] அவர்கள் பின்வருமாறு பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

”**கவலை** மற்றும் பதற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர், யா அல்லாஹ்! **திருக்குர்ஆனை** எங்கள் உள்ளங்களுக்கு நலமாக ஆக்குவாயாக! எங்கள் ஆன்மாக்களுக்குப் பிரகாசமாக ஆக்குவாயாக! எங்களின் கவலையைப் போக்குவதாக ஆக்குவாயாக! எங்களின் துன்பத்திற்கு நிவாரணியாக

ஆக்குவாயாக! எனப் பிரார்த்தனை செய்தால், அவரது பிரார்த்தனையை அல்லாஹ் நிச்சயமாக ஏற்றுக் கொள்வான்; அவருக்கு நிவாரணத்தையும் அமைதியையும் வழங்குவான்"

எனவே, ரமதான் மாதத்தில் **திருக்குர்ஆனுடன்** உறுதியானத் தொடர்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கும் நாம், திருக்குர்ஆனின் போதனைகளையும் அதன் வழிகாட்டுதல்களையும் தொடர்ந்து உறுதியாகப் பற்றிப் பிடிப்போமாக! அப்போது, நோன்பின் மூலம் நாம் விரும்பும் இறை பக்தியை வளர்த்துக் கொள்ளலாம்.

எவர்களின் உள்ளங்கள், உலகக் **கவலைகள்** மற்றும் பதற்றங்களுக்கிடையே அமைதியாக இருக்கின்றனவோ, எவர்களின் இறை உணர்வுகள் **திருக்குர்ஆன்** மூலம் எப்போதும் பிரகாசமாக உள்ளனவோ அவர்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக!

**اللَّهُمَّ اجْعَلِ ٱلْقُرآنَ ٱلْعظِيمَ رَبِيعَ قُلوبِنا، وَنُورَ صُدُورِنَا، وَجَلاءَ أَحْزانِنا، وَذَهابَ هُمومِنا وَغُمومِنا.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## <u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

உலகின் அமைதியான நிலைக்கு, வன்முறைகள், போர்கள், மோதல் போக்குகள் ஆகியவற்றால் தொடர்ந்து இடையூறு செய்யப்பட்டு வருகிறது. நம்மில் சிலர், இவற்றின் பின்னணியில் உள்ள தத்துவம் என்ன? அனைத்து விஷயங்களும் அல்லாஹ்வுக்கே உரியன எனச் சினச் சிந்தித்து, அவற்றின் பொருளை அறிய முயற்சிக்கின்றார்கள்; அம்முஸ்லிம்கள் நலம் பெறுகிறார்கள்; அமைதியைக் கடைப்பிடிக்கின்றார்கள்; அவ்வாறு செய்யாதவர்கள் நடைபெற்று வரும் கொந்தளிப்புக்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

படிப்பதில் கவனம் செலுத்தி வரும் நமது பல பிள்ளைகள் இதன் கவலையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்; பல பணியாளர்களும் கவலையில் மூழ்கியுள்ளார்கள்; வழியில் சிக்கிக் கொண்டுள்ள ஹாஜிகளையும் மற்றும் பயணம் செய்பவர்களையும் இங்கு நாம் மறந்து விட முடியாது. எத்தனையோ அப்பாவி உயிர்கள் இச்சண்டைத் தகறாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, புனிதமிக்க இந்த ரமதான் மாதத்தில் நோன்பு நோற்று வரும் நாம், அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளைக்குப் பின்னணியில் இறைத் தத்துவங்கள் உள்ளன என்பதில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எனும் ரீதியில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தொடர்ந்து அவர்களைப் பாதுகாக்க

வேண்டுமெனவும், அநீதமிழைக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டுமெனவும், போரும், இரத்தம் சிந்துதலும் முடிவுக்கு வரவேண்டுமென்றும், அமைதி, சாந்தி, சமாதானம் மீண்டும் திரும்ப வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்வோமாக!

போர் மேகம் சூழ்ந்துள்ள பகுதிகளுக்குப் பயணம் செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டுள்ளவர்கள், நமது நலனைப் பாதுகாக்க வேண்டுமெனக் கூறும் ”மகாதுஷ் ஷரீஆ” [ஷரீஅத்தின் கொள்கைகளை] மனதில் கொண்டு, தமது திட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென இந்த பிரசங்க மேடை கேட்டுக் கொள்கிறது.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ.

اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ الْعَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالْأَمْنَ وَالْأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.